# இந்து, பௌத்த மதங்களுக்கிடையிலான வழிபாட்டு இடைவினைகள்: பொத்துவில் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

**Subaraj, N***

**ஆய்வுச் சுருக்கம்**

புத்தர் பெருமானின் இலங்கைக்கான மூன்று விஜயங்களுடன் இலங்கையில் பௌத்தம் முளை கொள்ளத் தொடங்கியது. பின்னர் அசோகச்சக்கரவர்த்தியின் புத்திரர்களான சங்கமித்தை, மகிந்தர் ஆகியோரின் வருகையுடன் அம்மதம் அதிக செல்வாக்கு பெற்றது. இதேவேளை இந்துமத வழிபாட்டை ஒத்த இறைவணக்கத்தை செய்த இயக்கரும் நாகரும் புத்தரின் விஜயத்திற்கு முன்பே இலங்கையில் வாழ்ந்துள்ளனர். கீழைத்தேய மதங்களான பௌத்தமும் இந்துமதமும் ஒன்றோடொன்று பரஸ்பர தொடர்பு கொண்டே வளர்ச்சியடைந்துள்ளன. வழிபாடு, கலை, அரசியல் கொள்கை, தத்துவம், ஒழுக்கம் போன்ற பண்பாட்டம்சங்களில் இவை மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளன. இவற்றுள் முக்கிய பண்பாட்டுக் கூறான 'வழிபாட்டு முறைகளில்' இவ்விரு மதங்களும் ஏற்படுத்திக் கொள்ளும் பண்பாட்டு இடைவினைகள் பற்றி இவ்வாய்வு ஆராய்கின்றது.. வழிபாட்டு இடைவினைகள் மூலம் இந்து, பௌத்த மதங்களுக்கிடையிலான பண்பாட்டுக் கலப்பினை அடையாளங் கண்டு தெளிவுபடுத்தலும் அதனால் சமூகத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்களை மதிப்பீடு செய்தலும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். பொத்துவில் பிரதேசத்தில் இந்து, பௌத்த சமூகங்களுக்கிடையே ஏற்படும் வழிபாட்டு இடைவினைகள் சமூகத்தின் ஒன்றுபட்ட நடத்தை முறைக்கு வழிசமைக்கும் என்பது இவ்வாய்வின கருதுகோளாக அமைகின்றது. கிழக்கிலங்கையில் பொத்துவில் பிரதேசத்தை ஆய்வெல்லையாகக் கொள்ளும் இவ்வாய்வு ஒப்பியலாய்வு முறை, வரலாற்றியல் ஆய்வு முறைகளை பிரதானமாகக் கொள்கின்றது. களவாய்வு மூலம் பெறப்படும் தரவுகள் இவ்வாய்வுக்கான முதலாம்தர மூலங்களாக அமையவுள்ளன. களவாய்வில் ஆய்வுப்பிரதேசத்தில் சென்று வழங்கப்படும் வினாக்கொத்துக்கள், நேர்காணல்கள் போன்றன மூலம் பெறப்படும் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படும். ஆய்வின் துணை மூலங்களாக இந்து, பௌத்த மதங்களின் வழிபாடு, பண்பாடு, வாழ்வியல் நெறிகள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், இணையச் செய்திகள், பத்திரிகைத் தகவல்கள், ஒலியொளி நாடாக்கள், இறுவெட்டுக்கள் என்பன பயன்படுத்தப்படும். ஆய்வின் முடிவாக, அம்பாறை மாவட்டத்தில் இவ்விரு மதத்தவர்க்கிடையே பண்பாட்டுக் கலப்பு அதிகமாக இடம் பெற்றுள்ளன. பௌத்தம் பரவுவதற்கு முன்பிருந்தே வழிபடப்பட்ட பல தெய்வங்கள் காலப்போக்கில் தொடர்ந்தும் பௌத்தர்களாக மாறிய இந்துக்களால் வழிபடப்பட்டன. மேலும், மகாயான பௌத்தத்தில் இந்துசமயகருத்துக்கள், வழிபாட்டுமுறைகள் என்பன ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதற்கமைய இறை வழிபாடுகள், வாழ்க்கை நெறிமுறைகள், வாழ்வியற் சடங்குகள் மற்றும் ஏனைய பண்பாட்டம்சங்கள் என்பன பரஸ்பரத் தொடர்பு கொண்டனவாகக் காணப்படுகின்றன என்பதை ஆய்வின் முடிவாகக் கொள்ள முடியும்.

**பிரதான சொற்கள்:** பண்பாட்டு இடைவினைகள், வழிபாடு, இந்து, பௌத்த மதங்கள்

---

To whom correspondence should be addressed: subaraj84@yahoo.com

*Lecturer, Department of Languages, South Eastern University of Sri Lanka.